அஞ்சலி : எழுத்தாளர் சீர்காழி தாஜ் மறைவு ! இனிய நண்பரை , உடன் பிறவாச் சகோதரரை இழந்தோம் !

Written by - தொகுப்பு: வ.ந.கிரிதரன் -
Tuesday, 22 January 2019 06:11 - Last Updated Tuesday, 22 January 2019 14:00

இன்று மாலை முகநூலுக்குள் நுழைந்த என்னைத் துயரகரமான, அதிர்ச்சியினையூட்டிய செய்தியொன்று எதிர்கொண்டது. எழுத்தாளரும், இனிய நண்பரும், உடன் பிறவாச் சகோதரருமான சீர்காழி தாஜ் அவர்களின் மறைவுச் செய்திதான் அது. எழுத்தாளர் அனார் தனது முகநூற் பதிவில் தாஜ் அவர்களின் மறைவுச் செய்தியினைப் பகிர்ந்துகொண்டிருந்தார். செய்தியினை உள்வாங்குவதற்கே சிறிது கஷ்டமாகவிருந்தது. நேற்றும் தி.ஜானகிராமனின் படைப்புகள் பற்றிய முகநூற் குழுமத்தில் நான் பதிவிட்டிருந்த முகநூற் பதிவொன்றுக்குத் தன் கருத்துகளை 'அன்பு கிரி' என்று ஆரம்பித்துப் பகிர்ந்துகொண்ட எழுத்தாளர் சீர்காழி தாஜ் அவர்களா மறைந்து விட்டார். அவரது அங்கதம் தவழும் எழுத்து நடைக்கு நான் எப்பொழுதுமே அடிமை. நண்பர் எழுத்தாளர் தாஜ் அவர்கள் மறைந்த செய்தி ஏற்படுத்திய துயரத்தை அளவிட வார்த்தைகளேதுமில்லை.

சிந்தனைக்குருவி தன் சிறகுகளை அடிக்கின்றது. நண்பர் தாஜை முதன் முதலில் அறிந்த காலகட்டம் நினைவுக்கு வருகின்றது. தமிழகத்தில் ஸ்நேகா பதிப்பக வெளியீடுகளாக வெளியான எனது 'அமெரிக்கா (தொகுப்பு) மற்றும், மறும் நல்லூர் ராஜதானி நகர அமைப்பு நூல்களைத் தமிழக நூல் நிலையக் கிளையொன்றில் கண்டு, வாசித்துவிட்டுத் தன் கருத்துகளை ஆக்கபூர்வமான முறையில் நீண்ட இரு கடிதங்களாக எழுதி அனுப்பியிருந்தார். பின்னர் வைக்கம் முகம்மது பசீரின் 'எங்கள் தாத்தாவுக்கு ஆனையொன்றிருந்தது' நூலினைக் கனடாவில் வசிக்கும் தனது நண்பர் ஒருவர் மூலம் அனுப்பிருந்தார்.

'பதிவுகள்' இதழில் அவரது படைப்புகள் வெளியாகியுள்ளன. இந்நிலையில் நண்பர் தாஜிம் மறைவுச் செய்தி மிகுந்த அதிர்ச்சியினையே தந்தது. அச்செய்தினைக் கனவில் கூட எதிர்பார்த்திராத நிலையில் அச்செய்தி மிகுந்த அதிர்ச்சியினைத் தந்தது. கூடவே அளவிட முடியாத துயரையும் தந்தது.

நண்பர் தாஜின் சிறுகதைகள், குறுநாவல் ஆகியன உள்ளடங்கிய தொகுதியின் அண்மையில்தான் காலச்சுவடு பதிப்பகத்தினர் வெளியிட்டிருந்தனர். தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்க்கும் தொகுதிகளிலொன்று அத்தொகுதி.

சீர்காழி தாஜ் கவிதைகள், கதைகள் என்று இவரது எழுத்துப் பங்களிப்பு பன்முகத்தன்மை வாய்ந்தது. இணைய இதழ்கள் (பதிவுகள் உட்பட), தமிழகத்து வெகுசன மற்றும் சிற்றிதழ்கள் எனப்பல ஊடகங்களில் இவரது பல படைப்புகள் வெளியாகியுள்ளன. ஆனந்த விகடனின் பவளவிழாப் போட்டிகளில் இவரது கவிதைகள் முத்திரைக் கவிதைகளாக வெளியாகியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. தாஜ் அவர்கள் 'தமிழ்ப்பூக்கள்' என்னும் வலைப்பதிவினையும் நடாத்தி வருகின்றார். http://tamilpukkal.blogspot.ca/

எழுத்தாளர் தாஜ் அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினர்,

1 / 6

அஞ்சலி : எழுத்தாளர் சீர்காழி தாஜ் மறைவு! இனிய நண்பரை, உடன் பிறவாச் சகோதரரை இழந்தோம்!

Written by - தொகுப்பு: வ.ந.கிரிதரன் -
Tuesday, 22 January 2019 06:11 - Last Updated Tuesday, 22 January 2019 14:00

உறவினர்கள் மற்றும் நண்பர்கள் (முகநூல் நண்பர்களுட்பட) அனைவருக்கும் எனது மற்றும் 'பதிவுக'ளின் ஆழ்ந்த இரங்கல்கள். கூடவே 'பதிவு'களில், முகநூலில் வெளியான அவர் பற்றிய குறிப்புகளையும் மீண்டுமொருமுறை பகிர்ந்துகொள்கின்றேன்.

முகநூற் குறிப்புகள் : சீர்காழி தாஜின் முகநூற் பதிவுகள் பற்றியதொரு கலந்துரையாடல்

எழுத்தாளர் சீர்காழி தாஜ் எனது முகநூல் நண்பர்களில் முக்கியமானவர்களிலொருவர். அவர் அவ்வப்போது முகநூலில் இடும் பதிவுகள், சிறு குறிப்புகளாகவிருக்கட்டும் அல்லது குறுங்கவிதைகளாகவிருக்கட்டும், கலந்துரையாடலைத் தூண்டுபவை. அவரது எழுத்தில் வெளிப்படும் பாசாங்கற்ற உண்மையின் தெளிவும், தனக்குச் சரியென்று பட்டதை மனம் நோகாதவாறு துணிச்சலுடன் கூறும் பண்பும், மற்றும் ஆங்காங்கே விரவிக்கிடக்கும் அங்கதமும் என்னை மிகவும் கவர்ந்தவை. அண்மையில் முகநூலில் அவர் சில குறுங்கவிதைகளைப் பதிந்திருந்தார். அவை பற்றிய முகநூலில் பதிவு செய்த எனது கருத்துகளையும் (கவிதை வடிவில்), அவற்றையும் பதிவுகள் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதன்பொருட்டு இங்கு பகிர்ந்துகொள்கின்றேன்.

தாஜ் :
பொழுது போன நேரம்
எத்தனை விளக்குகளை
ஒளிர விட்டனென்ன?
இரவுதான் நட்சத்திர நாயகன்.

கிரிதரன் :
இத்தனை சுடர்கள் இரவினில் சுடர்ந்தும்
இரவின் ஆதிக்கமிருப்பது எதனால்?
இரவு கருமையில் இருப்பதெதனால்?
இதற்கொரு காரணம் அறிவியலுலகினில்
உண்டு. விரியும் வெளியில் தெரியும்
சுடர்கள் இருக்கும் காலம் ஒளியின்
வேகத்தால் ஒன்றென இருப்பதில்லை.
இரவு சுடரின் நாயகன் இருப்பது
இதனால் தானே. இதனால் தானே! :-)

தாஜ் :
//இரவு கருமையில் இருப்பதெதனால்?
இதற்கொரு காரணம் அறிவியலுலகினில்
உண்டு. விரியும் வெளியில் தெரியும்
சுடர்கள் இருக்கும் காலம் ஒளியின்
வேகத்தால் ஒன்றென இருப்பதில்லை.// இதனூடான அறிவியலை இன்னும் கொஞ்சம் விளக்கமாக எழுதுங்கள் கிரி. பிளீஸ்.

கிரிதரன் :

2 / 6

அஞ்சலி : எழுத்தாளர் சீர்காழி தாஜ் மறைவு ! இனிய நண்பரை , உடன் பிறவாச் சகோதரரை இழந்தோம் !

Written by - தொகுப்பு: வ.ந.கிரிதரன் -
Tuesday, 22 January 2019 06:11 - Last Updated Tuesday, 22 January 2019 14:00

வெளி விரிந்துகொண்டிருக்கிறது. சுடர்கள் வெவ்வேறு ஒளியாண்டுத் தொலைவுகளில் இருக்கின்றன. எமக்கு ஒரே நேரத்தில் அவை சுடர்வதாகத் தெரிந்தாலும் வெவ்வேறு காலகட்டங்களிலிருந்து அவை சுடர்ந்துகொண்டிருக்கின்றன. விரியும் வெளியினூடு எம்மை வந்தடையும் அவற்றின் ஒளியும் நீர்த்துப் போய் விடுகின்றது. இது போன்ற காரணங்களினாலே இவ்வளவு சுடர்களிருந்தும் இரவு வான் ஒளிராமல் இருண்டு கிடக்கின்றது.

நண்பர் தாஜின் கவிதையின் வரிகளான //பொழுது போன நேரம்
எத்தனை விளக்குகளை
ஒளிர விட்டனென்ன?
இரவுதான் நட்சத்திர நாயகன்// என்பதை நான் புரிந்து கொண்டதன் அடிப்படையில் என் கருத்தினை முன் வைத்தேன். பொழுது போன நேரம் எத்தனை விளக்குகளை ஒளிரவிட்டனென்ன என்பதிலுள்ள விளக்குகளை நான் நட்சத்திரங்களாகக் கருதினேன். அவ்விதம் அவை பல ஒளிர்ந்தாலும் இரவுதான் நட்சத்திர நாயகன் என்பதை நான் இருண்டிருக்கும் இரவுதான் அந்த ஒளிரும் நட்சத்திரங்களின் நாயகனென்று கருதிக்கொண்டேன். ஏனென்றால் இவ்வளவு சுடர்கள் (நட்சத்திரங்கள்) இருந்தும் , ஒளிர்ந்தும் அவற்றால் இரவின் கருமையினை நீக்க முடியவில்லை. இரவின் ஆதிக்கத்தை நீக்க முடியவில்லை. அதனால் இரவுதான் நட்சத்திரங்களின் நாயகன் என்று புரிந்துகொண்டதன் அடிப்படையில்

//இத்தனை சுடர்கள் இரவினில் சுடர்ந்தும்
இரவின் ஆதிக்கமிருப்பது எதனால்?
இரவு கருமையில் இருப்பததெனால்?
இதற்கொரு காரணம் அறிவியலுலகினில்
உண்டு. விரியும் வெளியில் தெரியும் //

என்று என் கருத்தினை முன் வைத்தேன். :-)

ஒருவேளை கவிஞர் இவ்விதம் எண்ணாமல் இன்னுமொரு அர்த்தத்தில் கூறியிருக்கலாம். அவ்விதமிருந்தாலும் நான் இவ்விதம் விளங்கிக்கொண்டதற்கேற்ப கவிஞரின் சொற்கள் விழுந்திருக்கின்றன. நல்லதொரு கவிதை. வாழ்த்துகள்.

தாஜ் :
அன்பு கிரி... உங்களது விளக்கத்திற்கு நன்றி. நீங்கள் நட்சத்திரங்களின் ஒளியை குறிப்பிட்டு சொல்வதறியாமல் நான்தான் கேள்வி எழுப்பி விட்டேனே. நீங்கள் சந்தேகப்பட்டிருப்பது மாதிரி //இன்னுமொரு அர்த்தத்தில்...// உருக்கொண்ட வரிகள்தான் அவை. என்னையும் / காலத்தையும் / தேய்மானத்தையும் / பளிச்சிடும் அவசர அவசர செயல்பாடுகளையும் முன் வைத்து எழுதப்பட்ட வரிகளது. நீங்கள் அர்த்தப்படுத்திக் கொண்டதும் சரி. வெறும் நான்கு வரிகள்தானே..!! சாதாரணம் காட்டிவிடுங்கள்.

கிரிதரன் :
நண்பர் தாஜுக்கு, ஒரு கவிதை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி புரியலாம். சில வேளைகளில் அதை எழுதியவரின் அர்த்தத்தையும் கடந்து இங்கு நடந்தமாதிரி நடக்கலாம். இதனால்தான் ஒரு படைப்புக்குப் பல உரைகள் சாத்தியமாகின்றன. இந்த விடயத்தில் பிரெஞ்சுத் திறனாய்வாளரான 'ரோலண்ட் பார்த்'தின் புகழ் பெற்ற

3 / 6

அஞ்சலி : எழுத்தாளர் சீர்காழி தாஜ் மறைவு ! இனிய நண்பரை , உடன் பிறவாச் சகோதரரை இழந்தோம் !

Written by - தொகுப்பு: வ.ந.கிரிதரன் -
Tuesday, 22 January 2019 06:11 - Last Updated Tuesday, 22 January 2019 14:00

கட்டுரையான 'ஆசிரியரின் மரணம்' என்பதை நினைவில் கொள்வது நல்லது. அந்தக் கட்டுரையில் ஒரு படைப்பொன்றினை அதனைப் படைத்த ஆசிரியரின் நோக்கம், வாழ்க்கைப் பின்னணியில் ஆராய்வதைக் கடுமையாக எதிர்த்திருப்பார். அந்தப் படைப்பினை அர்த்தப்படுத்திக்கொள்வதற்கு அதனைப் படைத்தவர் முக்கியமில்லாதவர். அந்தப் படைப்பின் மூலமல்ல முக்கியம். அது யாரைச் சென்றடைகின்றதோ அதுவே முக்கியம். படைத்தவரின் பின்னணியில் ஒரு படைப்பினை அர்த்தப்படுத்திக்கொள்வது அந்தப் படைப்பின் மீதான வாசிப்பின் மீது தடைகளை ஏற்படுத்தி விடுகின்றதென்பதவர் கருத்து. தாஜின் இந்தக் கவிதை வரிகளை நான் அர்த்தப்படுத்திக் கொண்டது இதனைப் படைத்த தாஜின் அர்த்தத்தினின்றும் வேறானபோதும் என்னைப் பொறுத்தவரையில் என் அர்த்தத்திற்குச் சரியாகவே அந்த நறுக்குக் கவிதை வரிகள் அமைந்திருக்கின்றன. இதனை இன்னுமொருவர் இன்னொரு கோணத்தில் புரிந்துகொள்வார். இத்தகையதொரு சூழலில் //சாதாரணம் காட்டிவிடுங்கள்// என்று கூறும் உரிமையினை நீங்கள் அந்த வரிகளை முகநூலில் பதிவு செய்ததுடன் இழந்து விட்டீர்கள். இப்பொழுது அந்த வரிகள் முகநூல் வாசகர்களின் பல்வேறுபட்ட வாசிப்பினை வேண்டி நிற்கின்றன. :-)

தாஜ் :
புண்ணிய பூமியில்
எத்தனை ஜனத் திரள்!
எங்குத் தேடினாலும்
மனிதனைக் காணோம்.

கிரிதரன் :
பாலியல் வன்முறை ஜாதிக் கலவரம்
நாளும் பொழுதும் நடக்கும் பூமியைப்
புண்ணிய பூமி எனல் தகுமோ?
நண்பரே! வெந்த புண்ணில் வேலினைப்
பாய்ச்சிடும் வார்த்தைகள். மானுடர் நெஞ்சினை
வருத்திடும் மண்ணிது. இனிமேல் கூறுவோம்
புண்செய்யும் பூமி என்று.
மானுடர் உள்ளம் பண்படும் வரையில். :-)

தாஜ் :
புண்செய்யும் பூமியென்பது அர்த்தப்படவே செய்கிறது. கலாச்சாரப் பண்பாட்டின் கூறுகள் நம் மீது ஏற்றிவைத்திருப்பதெல்லாம் 'புண்ணிய பூமி' இதுவென்று. முதல் பூஷ்வா சுரண்ட தொடங்கிய கணத்தில் அவன் படிப்பித்த ஆதிப் பாடமாக இருக்கும் இந்தப் 'புண்ணிய பூமி!' கிரி சரியாதான் பேசுகிறேனோ?

தாஜ் :
யாரும் இல்லாத ஊருக்கு
நான் ஏன்..
இத்தனை அவசியமாக
விரைந்து கொண்டிருக்கிறேன்?

கிரிதரன் :
இல்லாத ஊருக்கு விரைவதன் அவசியம்

4 / 6

அஞ்சலி : எழுத்தாளர் சீர்காழி தாஜ் மறைவு ! இனிய நண்பரை , உடன் பிறவாச் சகோதரரை இழந்தோம் !

Written by - தொகுப்பு: வ.ந.கிரிதரன் -
Tuesday, 22 January 2019 06:11 - Last Updated Tuesday, 22 January 2019 14:00

ஏனென்று கேட்கும் நண்பரே. காரணம்
யாரும் மற்ற ஊரில் நிலவிடும்
தனிமை நாடிய விருப்பினால் போலும். :-)

தாஜ் :
//தனிமை நாடிய விருப்பினால் // மனிதன் இல்லாத இடம்தான் ஏது கிரி? தனிமையில் கூட அவனது நல்லதும் கெட்டதுமான சிந்தைதானே நம்மை ஆள்கிறது. எந்த ஞானியாலும் அதனிடமிருந்து தப்ப முடியுமா என்ன? நான் சுட்டும் விரைவு..., நிஜத்தில் உங்களுக்கு புரியாததுமல்ல.

தாஜ் :
பொழுதெல்லாம்
தேடியலைகிறேன்.
அனுபவம் கூட
கூடிவர மறுக்கிறது!

ஹிம் ரஷீத் :
ஏதோ ஒரு சக்தி நமக்கு மேலே இருக்கிறது என்று சொல்கிறார்களே...அதனுடைய வேலையாக இருக்குமோ??

தாஜ் :
//ஏதோ ஒரு சக்தி நமக்கு மேலே இருக்கிறது // ஆமாம் இருக்கிறது. இது விரிவான தளத்தில் வியக்க, வியக்க பேச வேண்டிய ஒன்று. இந்த நாலுவரி கவிதை மொழி நான் உணர்ந்த தனிச் சங்கதி. காலத்தில் சாதாரணமாக வாய்க்கக் கூடிய அனுபவம், அலைகிற சிலபோது கூடிவருவதில்லை என்கிற எதிர்மறை வியப்புதான் அந்த நான்கு வரிகள். அவ்வளவுதான். நிறைய எழுதி சிரமம் தந்துவிட்டதாக நினைக்கிறேன். Anyway.. ரஷீதுக்கு நன்றி.

கிரிதரன் :
பொழுது எல்லாம் தேடி அலைவதும்
அனுபவம் தானே! கூடவே நிழலென
அனுபவம் வருகையில் கூடி உம்முடன்
கூடிவர வில்லை என்பதி லென்ன
நியாய முண்டு. கூறுவீர் நண்பரே! :-)

தாஜ் :
அன்பு கிரி.. அனுபவமும் நாளும் கூடினால்தானே அந்த அனுபவத்திற்கும் ஓர் அழகிருக்க முடியும்? செக்கு மாட்டுத்தனம் என்ன அனுபவத்தை தந்துவிட முடியும் சொல்லுங்கள்?

முகநூற் குறிப்புகள் (பதிவுகள் **- 04 August 2012)**

5 / 6

Written by - தொகுப்பு: வ.ந.கிரிதரன் -
Tuesday, 22 January 2019 06:11 - Last Updated Tuesday, 22 January 2019 14:00